# DEPOSITION OF WITNESS

(Chapter XXV of BNSS)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NATHAM

STC.No. 69/2025 LW- 2 PW- 2

| | |
|---|---|
| Name | : மதுரை வீரன் ( காயம்பட்ட சாட்சி) |
| Father's/Husband's Name | : நன்னியான் |
| Village | : கோடாங்கிப்பட்டி |
| Taluk | : வாடிப்பட்டி |
| District | : மதுரை |
| Age | : 24/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 05th day of March 2026

(எதிரி ஆஜரில்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

**(சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை)**

1) நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வந்து திருப்பூர் பனியன் கம்பெனியில் வேலை செய்து வருகிறேன். அ.சா.1ஐ தெரியும். எதிரியை தெரியும். பெயர் தெரியாது. அவரை பார்த்தால் என்னால் அடையாளம் காட்ட முடியும். சுமார் ஒரு வருடத்திற்கு முன்பாக ஒரு நாள் நள்ளிரவு சுமார் 3.00 மணியளவில் மகேந்திரா பிக்கப் வேனை குமார் என்பவர் ஓட்ட நான் அவருடன் அமர்ந்து திருப்பூரிலிருந்து குன்னாரம்பட்டியை நோக்கி சென்று கொண்டிருந்தோம். நண்பர் ஒருவரின் வீட்டிற்கு வீட்டு உபயோகப் பொருட்களை ஏற்றிக் கொண்டு சென்றோம். குன்னாரம்பட்டி பிரிவில் திரும்பும்போது எங்களுக்கு பின்புறம் வந்த ஆம்னி பேருந்து (Sleeper Bus) ஒன்று திடீரென மோதி விபத்து ஏற்படுத்தியதில் எங்களது பிக்கப் வேன் பள்ளத்தில் கவிழ்ந்து விட்டது. எனக்கு அதில் தலையிலும், கையிலும் சாதாரண காயம் ஏற்பட்டது. பிக்கப் வேனை ஓட்டி வந்த

குமார் என்பவரின் கால் மீது பிக்கப் வேன் கிடந்தது. ஆம்னி பேருந்தில் வந்த நபர்களின் உதவியுடன் அவரை பிக்கப் வேனில் இருந்து வெளியே தூக்கினோம். அவருக்கு கால் மற்றும் தலையில் பலத்த காயம் ஏற்பட்டிருந்தது. பின்னர் அவசர ஊர்தியில் ஏற்றி எங்கள் இருவரையும் நத்தம் அரசு மருத்துவமனையில் சேர்த்தார்கள். பின்னர் குமார் என்பவரை மேல் சிகிச்சைக்காக திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் கொண்டு போய் சேர்த்தோம். நான் மேற்படி திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் ஒரு நாளும், பிக்கப் வேனை ஓட்டி வந்த குமார் 4 நாட்களும் உள்நோயாளியாக சிகிச்சை எடுத்துக் கொண்டோம். போலீசார் என்னை விசாரித்தனர்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

2) புகார்தாரர் எந்த ஊரை சேர்ந்தவர், அவரது தந்தை பெயர் ஆகிய விபரங்கள் தெரியுமா என்றால் தெரியாது. அவர் எனது ஊரை சேர்ந்தவர் இல்லை என்றால் சரிதான். ஆம்னி பேருந்தை ஓட்டி வந்த நபரை பார்த்தேனா என்றால் பார்த்தேன் விபத்து ஏற்பட்டு நான்தான் ஆம்னி பேருந்தில் இருந்தவர்களை உதவிக்கு அழைத்தேன். விபத்து ஏற்பட்ட போது ஆம்னி பேருந்தை ஓட்டிய நபர் ஓட்டுனர் இருக்கையில் அமர்ந்திருந்தார். நான் அந்த வாகனத்தை நிறுத்தவில்லை என்றால் அவர் சென்றிருப்பார். போலீசார் விசாரிக்கும் போது இந்த விபரத்தை சொன்னேனா என்றால் குமார் என்பவரிடம் சொன்னேன், போலீஸாரிடம் சொல்லவில்லை. பிக்கப் வண்டி ஆனது திருப்பூர் கொடிக்கம்பத்தில் இருந்து பொருட்களை ஏற்றி கொண்டுவந்தேன். பிக்கப் வாகனத்தில் நான் முன்புறம் இருந்தேனா அல்லது பின்புறம் இருந்தேனா என்றால் முன்புறம் அமர்ந்திருந்தேன். இந்த விபரத்தை போலீசாரிடம் சொன்னேனா என்றால் போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

3) நான் சென்ற வண்டியானது இண்டிகேட் போடப்பட்டதா இல்லையா என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. இண்டிகேட் போடப்பட்டது.

நானும், டிரைவர், பாலமுருகன் ஆகியோர் நண்பர்கள் என்றால் சரிதான். திருப்பூரில் இருந்து கிளம்பும்போது நாங்கள் மது அருந்தி விட்டு தான் கிளம்பினோம் என்றால் சரியல்ல. நாங்கள் வந்த பிக்கப் வாகனத்தில் பாலமுருகன் எங்கு அமர்ந்து வந்தார் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். நானும், டிரைவர் மட்டும்தான் வந்தோம். பாலமுருகன் என்பவர் எங்களுடன் வண்டியில் வரவில்லை என்றாலும் வண்டியில் சென்ற எங்கள் இருவருக்கும் மட்டும்தான் காயம் ஏற்பட்டது என்றாலும் பாலமுருகனுக்கு எந்த ஒரு காயமும் ஏற்படவில்லை என்றாலும் சரிதான். பாலமுருகனுக்கு காயம் ஏற்பட்டதாக சொல்லியிருந்தால் தவறு என்றால் சரிதான். நாங்கள் ஏற்றி சென்ற பொருட்கள் என்ன ஆனது அதற்கு சேதாரம் ஆனதா என்பது குறித்து போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

4) நான் சொல்வது போல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும் நாங்கள் மது போதையில் இருந்ததால் தான் யார் யார் வண்டியில் இருந்தார் எந்த இடத்தில் அமர்ந்து வந்தார்கள் என்ற விபரத்தை சரியாக சொல்ல முடியவில்லை என்றால் சரியல்ல. போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்றாலும் போலீசார் தற்போது சொன்னதால் நீதிமன்றத்திற்கு வந்து சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரிதான். எதிரியால் விபத்து ஏற்படவில்லை என்றாலும், எதிரியால் எங்களுக்கு காயம் ஏற்படவில்லை என்றாலும் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கத்திற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. புகார்தாரரின் கவனக் குறைவால்தான் விபத்து நடைபெற்றுள்ளது என்றால் சரியல்ல.

**மறு விசாரணை :** இல்லை

மேற்படி சாட்சியத்தை, சாட்சி சொல்ல–சொல்ல, என்னால் திறந்த நீதிமன்றத்தில் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, சரிபார்க்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. அதை சாட்சி படித்துப்பார்த்து, சரி என ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

Tmt.J.Aafreen Begum

Digitally signed by Tmt.J.Aafreen Begum
Date: 2026.08.25 18:28:33 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
நத்தம்

DEPOSITION OF WITNESS

(Chapter XXV of BNSS)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NATHAM

STC.No. 69/2025 LW- 5 PW- 3

| | | |
|---|---|---|
| Name | : | செல்வகுமார் ( பார்வை மகஜர் சாட்சி) |
| Father's/Husband's Name | : | ராமகிருஷ்ணன் |
| Village | : | அம்மாபட்டி |
| Taluk | : | நத்தம் |
| District | : | திண்டுக்கல் |
| Age | : | 34/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 11th day of May 2026

(எதிரி ஆஜரில்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

**(சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை)**

1) நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வந்து சென்ட்ரிங் வேலை செய்து வருகிறேன். தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணத்திலுள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். சுமார் 1-1/2 வருடங்களுக்கு முன்பாக ஒரு நாள் காலை சுமார் 7.00 மணியளவில் அம்மாபட்டியிலுள்ள டீக்கடை முன்பாக வைத்து போலீசார் வந்து விபத்து வழக்கு குறித்து விசாரணை செய்தார்கள். பின்னர் விசாரணைக்கு வந்ததற்காக சாட்சியாக கையொப்பம் கேட்டதன்பேரில் நான் கையொப்பம் செய்தேன். (**பார்வை மகஜரிலுள்ள முதலாவது சாட்சிக் கையொப்பம் அ.த.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

2) நான் கையொப்பம் செய்த ஆவணத்தில் என்ன எழுதியிருந்தது என்ற விபரம் தெரியாது என்றால் சரிதான். போலீசார் என்னிடம் அவர்கள் எழுதிய விபரத்தை படித்துக்காண்பித்தார்களா என்றால் சொன்னார்கள் ஞாபகமில்லை.

**மறு விசாரணை :** இல்லை

மேற்படி சாட்சியத்தை, சாட்சி சொல்ல–சொல்ல, என்னால் திறந்த நீதிமன்றத்தில் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, சரிபார்க்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. அதை சாட்சி படித்துப்பார்த்து, சரி என ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

Tmt.J.Aafreen Begum

Digitally signed by Tmt.J.Aafreen Begum
Date: 2026.08.25 18:28:41 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
நத்தம்

# DEPOSITION OF WITNESS

(Chapter XXV of BNSS)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NATHAM

STC.No. 69/2025 LW- 6 PW- 4

| | |
|---|---|
| Name | : மோகன் ( பார்வை மகஜர் சாட்சி) |
| Father's/Husband's Name | : சேக்குபதி |
| Village | : அம்மாபட்டி |
| Taluk | : நத்தம் |
| District | : திண்டுக்கல் |
| Age | : 48/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 11th day of May 2026

(எதிரி ஆஜரில்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

**(சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை)**

1) நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வந்து டீக்கடை நடத்தி வருகிறேன். தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணத்திலுள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். சுமார் 7 மாதங்களுக்கு முன்பாக ஒரு நாள் என் கடையின் முன்பாக போலீசார் வந்து விபத்து வழக்கு குறித்து விசாரணை செய்தார்கள். பின்னர் விசாரணைக்கு வந்ததற்காக சாட்சியாக கையொப்பம் கேட்டதன்பேரில் நான் கையொப்பம் செய்தேன். (**பார்வை மகஜரிலுள்ள இரண்டாவது சாட்சிக் கையொப்பம் அ.த.சா.ஆ. 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

2) நான் கையொப்பம் செய்த ஆவணத்தில் என்ன எழுதியிருந்தது என்ற விபரம் தெரியாது என்றால் சரிதான்.

**மறு விசாரணை :** இல்லை

மேற்படி சாட்சியத்தை, சாட்சி சொல்ல–சொல்ல, என்னால் திறந்த நீதிமன்றத்தில் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, சரிபார்க்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. அதை சாட்சி படித்துப்பார்த்து, சரி என ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

Tmt.J.Aafreen Begum

Digitally signed by Tmt.J.Aafreen Begum
Date: 2026.08.25 18:28:47 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
நத்தம்

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NATHAM

Case No STC.No. 69/2025 LW- 7 PW- 5

Name : சதீஸ்குமார் ( மருத்துவர்)

Father's/Husband's Name : மணிசேகரன்

Village : நத்தம் அரசு மருத்துவமனை

Taluk : நத்தம்

District : திண்டுக்கல்

Age : 41/2026

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 21st day of May 2026

எதிரி ஆஜரில்லை. பிரிவு 355 BNSSன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**(சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு முதல் விசாரணை)**

1. நான் தற்போது நத்தம் அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 19.08.2024ம் தேதி அதிகாலை 4.00 மணியளவில் நான் நத்தம் மருத்துவமனையில் பணியில் இருந்தபோது, திருச்சி, மேட்டுப்பட்டி, கைகாட்டி பகுதியை சேர்ந்த முத்துச்சாமி மகன் 26 வயதுடைய குமார் என்பவரை அவரது உடன் வேலை பார்க்கும் பாலமுருகன் என்பவர் 108 அவசர ஊர்தியில் சிகிச்சைக்காக அழைத்து வந்திருந்தார். அவரை நான் விசாரித்தபோது, அவர் அன்றையதினம் அதிகாலை 3.30 மணியளவில் அம்மாபட்டி பிரிவு அருகில் தனது நான்கு சக்கர பிக்கப் வாகனத்தை ஓட்டிச் செல்லும்போது அடையாளம் தெரியாத தனியார் டிராவல்ஸ் பேருந்து இடித்ததாக கூறினார். அவர் தனக்கு வலதுகாலில் வலி இருப்பதாகவும், ரத்தம் வடிவதாகவும் கூறினார். வலதுகாலை அசைப்பதில் சிரமம் இருப்பதாக கூறினார். அவரை நான் பரிசோதனை செய்தததில் அவருக்கு பின்வரும் காயங்கள் ஏற்பட்டிருந்தது.

1. வலது கால் பாதத்தில் சிராய்ப்பு காயம் காணப்பட்டது.

2. வலது கணுக்காலில் வலியுடன் கூடிய வீக்கம் இருந்தது.

3. இடது தலைப்பகுதியில் 1 x 1 செ.மீ அளவுள்ள சிராய்ப்பு காயம் இருந்தது.

அவருக்கு முதலுதவி சிகிச்சை செய்யப்பட்டு, மேல்சிகிச்சைக்காக திண்டுக்கல் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு பரிந்துரை செய்து அனுப்பி வைத்தேன். அவர் அங்கு 19.08.2024 மற்றும் 20.08.2024 வரை உள்நோயாளியாக சிகிச்சை பெற்றுள்ளார்.அவருக்கு ஏற்பட்டிருந்த காயங்கள் சாதாரண காயங்கள் என்று கருத்துரை வழங்கி சான்றழித்தேன். ( **குமார் என்பவரின் விபத்து பதிவேடுடன் கூடிய காயச்சான்றிதழ் அ.த.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** )

2) அன்றையதினம் அதிகாலை 4.15 மணிக்கு மதுரை கோடாங்கிபட்டியை சேர்ந்த நன்னியன் என்பவரின் மகன் 24 வயதுடைய மதுரைவீரன் என்பவரை அவருடன் வேலை பார்க்கும் பாலமுருகன் என்பவர் 108 அவசர ஊர்தி மூலம் என்னிடம் சிகிச்சைக்கு அழைத்து வந்திருந்தார். அவரை நான் விசாரித்தபோது அவர் அன்றையதினம் அதிகாலை 3.30 மணியளவில் அம்மாபட்டி பிரிவு அருகே பிக்கப் வேனில் பயணம் செய்து வந்தபோது அடையாளம் தெரியாத தனியார் டிராவல்ஸ் பேருந்து இடித்ததாக கூறினார். அவர் தனது தலையிலும், இரண்டு கால் முட்டியிலும் வலியிருப்பதாகவும், ரத்தம் வழிவதாகவும் கூறினார். அவர் அடிபட்ட சமயத்தில் சுயநினைவை இழந்ததாகவும் கூறினார். நான் அவரை பரிசோதித்தபோது சுயநினைவுடன் இருந்தார்.

1) தலையின் உச்சிப்பகுதியில் 2 x 2 செ.மீ அளவுள்ள ரத்தக்கட்டு காயமும்,

2) 2x2 செ.மீ அளவுள்ள சிராய்ப்பு காயமும் காணப்பட்டது.

3) இரண்டு கால்முட்டியிலும் சிராய்ப்பு காயம் காணப்பட்டது.

அவருக்கு முதலுதவி சிகிச்சை செய்யப்பட்டு, மேல்சிகிச்சைக்காக திண்டுக்கல் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு பரிந்துரை செய்து அனுப்பி வைத்தேன்.

அங்கு அவர் 19.08.2024 உள்நோயாளியாக சேர்ந்து சிகிச்சை பெற விருப்பம் தெரிவிக்காமல் தன்னிச்சையாக சென்றுவிட்டதால் அவருக்கு ஏற்பட்டிருந்த காயங்கள் குறித்து கருத்துரை வழங்க இயலாது என்று சான்றளித்தேன். ( **மதுரைவீரன்**

**என்பவரின் விபத்து பதிவேடுடன் கூடிய காயச்சான்றிதழ் அ.த.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. )** வாகனங்களில் பயணம் செய்து மற்றொரு வாகனம் மோதும்போது மேற்சொன்ன காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளதா என்றால் வாய்ப்புள்ளது. போலீசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை.</u>**

3) குமார் என்பவரை பரிசோதனை செய்தவகையில் அவருக்கு கை மற்றும் நெஞ்சு பகுதியில் காயங்கள் இல்லை என்றால் சரிதான். குமார் மற்றும் மதுரைவீரன் ஆகியோரை பாலமுருகன் என்பவர் அழைத்து வந்தார் என்றால் சரிதான். உடன் வந்த பாலமுருகன் என்பவருக்கு காயங்கள் இருந்ததாக தெரிவிக்கவில்லை என்றாலும், அவருக்கு சிகிச்சை அளிக்கவில்லை என்றாலும் சரிதான். நான் சொல்லும் காயங்கள் ஆனது பொதுவாக ஒரு நபர் பிக்கப் வேனில் வரும்போது அந்த வேன் தானாக அப்செட் ஆகி மேற்படி காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் உள்ளது. குமார் என்பவருக்கு சிகிச்சை அளித்தது தொடர்பாக போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல, விசாரித்தார் சிகிச்சை அளித்ததாக சொன்னேன். நான் சொல்வது போல் விசாரித்திருந்தால் குமாருக்கு சிகிச்சை அளித்தது தொடர்பாக தெரிவித்திருப்பேன் என்றாலும், அதனால் போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்றாலும் சரியல்ல. மதுரைவீரன் என்பவருக்கும், பாலமுருகன் என்பவருக்கும் சிகிச்சை அளித்ததாகதான் போலீசார் விசாரணையில் சொன்னதாக உள்ளது என்றாலும், அதனால் குமார் என்பவருக்கு சிகிச்சை அளித்தது தொடர்பாக அளிக்கும் சாட்சியம் சட்டப்படி ஏற்புடையதல்ல என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை**

மேற்படி சாட்சியத்தை, சாட்சி சொல்ல–சொல்ல, என்னால் திறந்த நீதிமன்றத்தில் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, சரிபார்க்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. அதை சாட்சி படித்துப்பார்த்து, சரி என ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

Tmt.J.Aafreen Begum

Digitally signed by Tmt.J.Aafreen Begum
Date: 2026.08.25 18:28:55 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், நத்தம்

# DEPOSITION OF WITNESS

(Chapter XXV of BNSS)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NATHAM

STC.No. 69/2025 LW- 3 PW- 6

| | |
|---|---|
| Name | : பாலமுருகன் ( கண்ணுற்ற சாட்சி) |
| Father's/Husband's Name | : கணேசன் |
| Village | : குன்னாரம்பட்டி |
| Taluk | : மேலூர் |
| District | : மதுரை |
| Age | : 24/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 02nd day of July 2026

(எதிரி ஆஜரில்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

**(சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை)**

1) நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வந்து திருப்பூர் பனியன் கம்பெனியில் டெய்லர் வேலை செய்து வருகிறேன். அ.சா.1ஐ தெரியும். வழக்கு எதிரியை நான் பார்த்தது இல்லை. அவர் பெயர் தெரியாது. சுமார் 1-1/2 வருடங்களுக்கு முன்பாக ஒரு நாள் அதிகாலை 02.40 முதல் 3.00 மணியளவில் அம்மாபட்டி விலக்கு அருகே பிக்கப் வேனில் நானும், ஓட்டுநர் குமார் மற்றும் மதுரை வீரன் ஆகியோர் திருப்பூரிலிருந்து எங்கள் ஊருக்கு எங்கள் வீட்டு சாமான்களை ஏற்றிக் கொண்டு நத்தம் நோக்கி நாங்கள் கிழக்கு திசையில் வந்தபோது அதே திசையில் எங்களுக்கு பின்புறம் Essar டிராவல்ஸ் பஸ் வந்தது. அம்மாபட்டி விலக்கு

அருகே எங்கள் வேனை வலதுபக்கம் திருப்பும்போது மேற்படி பேருந்து மோதி விபத்து ஏற்பட்டது. மேற்படி பேருந்து வேகமாக வந்து மோதியது. மேற்படி விபத்தில் எனக்கு தலையில் உடைந்த கண்ணாடி துகள்கள் குத்தி ரத்தக்காயம் ஏற்பட்டது. கை, கால்களில் சாதாரண காயமும் ஏற்பட்டது. ஓட்டுநர் குமாருக்கு இடது கால் உடைந்து எலும்பு முறிவு ஏற்பட்டது. மதுரை வீரன் என்பவருக்கு தலையில் கண்ணாடி துகள்கள் குத்தி ரத்தக்காயம் ஏற்பட்டது. பின்னர் அவசர ஊர்தியில் எங்களை நத்தம் அரசு மருத்துவமனையில் சேர்த்து அங்கு பார்க்கமுடியாது என்றதால் மேல்சிகிச்சைக்காக திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் சேர்ந்து நானும், மதுரைவீரனும் 2 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சை எடுத்துக்கொண்டோம். ஓட்டுநர் குமார் சுமார் 3 வாரங்களுக்கு மேல் சிகிச்சையில் இருந்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

2) நான் வந்த வாகனத்தில் எந்த பக்கத்தில் இருந்தேன் என்றால் வேனில் உள்ள கேபினில் இடதுபுறத்தில் உட்கார்ந்து இருந்தேன். சம்பவமானது இரவு நேரத்தில் நடந்தது என்றால் சரிதான், அதிகாலை 2.00 மணி முதல் 2.40 மணிக்குள் இருக்கும். இடது புறத்திலிருந்து வலது புறத்திற்கு திடீரென வாகனத்தை திருப்புவது தவறு என்றால் சரிதான். நாங்கள் வந்த வாகனத்திற்கு என்ன ஆனது என்றால் இரண்டு முறை கவிழ்ந்து பள்ளத்தில் சென்று வேப்பமரத்தில் மோதி நின்றது. பள்ளத்தில் தலைகீழாக வண்டி கவிழ்ந்தது என்றால் சரிதான். நாங்கள் வந்த வாகனம் தான் அதிவேகத்தில் வந்து திடீரென வலது புறமாக திரும்பியதில் தான் வண்டி கவிழ்ந்து பள்ளத்தில் விழுந்தது என்றால் சரியல்ல. சம்பவ இடத்திற்கு அருகே கடை மற்றும் வீடுகள் உள்ளது என்றால் சரிதான், விபத்து நடந்த சமயம் கடையில் யாரும் இல்லை கடை பூட்டியிருந்தது. பொருட்களை வாகனத்தில் ஏற்றி வந்ததாக சொல்லும் நிலையில் அந்த பொருட்களுக்கு என்ன ஆனது என்ற விபரத்தை அ.சா.1

கொடுத்த புகார் மனு மற்றும் போலீசார் விசாரணையில் சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல, எனது அப்பா அது தொடர்பான விபரங்களை போலீசாரிடம் சொன்னார். எனது அப்பாவும் அ.சா.1னுடன் காவல் நிலையத்திற்கு சென்றார்.

3) எனக்கு சம்பவத்தால் காயம் ஏற்படவில்லை என்றாலும், சிகிச்சை எடுத்துக் கொள்ளவில்லை என்றாலும், வழக்கிற்காக மிகைப்படுத்தி சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. மதுரை வீரன் என்பவரும் முழுமையான சிகிச்சைக்கு ஒத்துழைக்கவில்லை என்றாலும், அதனால் நான் சொல்லும் விதத்தில் அவருக்கு காயங்கள் எதுவும் ஏற்படவில்லை என்றாலும் சரியல்ல. நான் குமார் என்பவருடன் சிகிச்சைக்கு செல்லவில்லை என்றாலும், அதனால் நான் அவரை பார்க்கவில்லை என்றாலும், அவருக்கு ஏற்பட்ட காயங்கள் குறித்து எனக்கு தெரியாது என்றாலும் சரியல்ல. குமாருக்கு ஏற்பட்ட காயங்கள் குறித்து எனக்கு தெரியாத நிலையில் அவருக்கு இடதுகாலில் காயம் ஏற்பட்டு முறிவு ஏற்பட்டதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. நாங்கள் சென்ற பிக்கப் வேன் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து இடதுபக்கத்தில் இருந்து வலதுபுறமாக திடீரென சாலையில் திரும்பியதில் விபத்து ஏற்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல. நான் சொல்லும் விதத்தில் விபத்து ஏற்பட்டு இருந்தால் எங்கள் பின்னால் வந்த Essar பஸ் மோதியதில் Essar பஸ் ஓட்டுனருக்கும், கண்டக்டர் மற்றும் பயணிகளுக்கும் காயங்கள் ஏற்பட்டிருக்கும் என்றாலும் இந்த வழக்கில் அவ்வாறு இல்லை என்பதால் நான் சொல்வது போல் வழக்கு சம்பவம் இல்லை என்றால் சரியல்ல. Essar பஸ்ஸினால் விபத்து ஏற்படவில்லை என்றால் சரியல்ல. எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை**

மேற்படி சாட்சியத்தை, சாட்சி சொல்ல–சொல்ல, என்னால் திறந்த நீதிமன்றத்தில் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, சரிபார்க்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. அதை சாட்சி படித்துப்பார்த்து, சரி என ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

Tmt.J.Aafreen Begum

Digitally signed by Tmt.J.Aafreen Begum
Date: 2026.08.25 18:29:03 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், நத்தம்

<u>DEPOSITION OF WITNESS</u>

(Chapter XXV of BNSS)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NATHAM

STC.No. 69/2025 LW- 9 PW- 7

| | |
|---|---|
| Name | : தர்மர் (புலன் விசாரணை அதிகாரி) |
| Father's/Husband's Name | : முத்துக்கண்ணன் |
| Village | : வேடசந்தூர் காவல் நிலையம், |
| Taluk | : வேடசந்தூர் |
| District | : திண்டுக்கல் மாவட்டம் |
| Age | : 57/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 11th day of August 2026

( எதிரி ஆஜரில்லை, மனுதாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டுள்ளார். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)

சாட்சியம் பதிவு செய்யப்பட்ட நேரம் பகல் 12.10PM முதல் 12.45 PM

**(சாட்சிக்கு காணொளி காட்சி வாயிலாக சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை)**

1. நான் தற்போது வேடசந்தூர் காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 19.08.2024ம் தேதி 17.00 மணிக்கு நான் நத்தம் காவல் நிலைய சார்பு ஆய்வாளராக பணிபுரிந்தபோது திண்டுக்கல் அரசு மருத்துவமனையிலிருந்து கிடைக்கப்பெற்ற தகவலை பெற்று அதன் பெயரில் மருத்துவமனை சென்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையிலிருந்த திருச்சி மாவட்டம், மணப்பாறை தாலுகா, பிராம்பட்டி அருகே மேட்டுப்பட்டி சேர்ந்த முத்துச்சாமி மகன் குமார்என்பவரை விசாரித்து புகார் வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் 21.00மணிக்கு நிலையம் வந்து புகார் வாக்குமூலத்தின் தன்மைக்கேற்ப நத்தம் காவல் காவல் நிலைய கு.எண்.459/2024,

சட்டப்பிரிவுகள் 281 மற்றும் 125(a) of BNS ஆக வழக்கு பதிவு செய்து முதல் தகவல் அறிக்கை தயார் செய்தேன். **(அந்த முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** பின்னர் புகார் வாக்குமூலம் மற்றும் முதல் தகவல் அறிக்கையின் அசலை கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தும், இதர நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பிவைத்தும், ஒரு நகலை நான் எனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவ இடமான நத்தம்–கொட்டாம்பட்டி ரோடு, அம்மாப்பட்டி பிரிவு அருகே 20.08.2024 அன்று காலை 7.00 மணிக்கு சென்று சாட்சிகள் செல்வகுமார் மற்றும் மோகன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு படம் வரைந்து பார்வை மகஜர் தயார் செய்தேன். **(மாதிரி வரைபடம் அ.த.சா.ஆ.7, பார்வை மகஜர் அ.த.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

2. பின்னர் சம்பவ சாட்சிகள் குமார், மதுரை வீரன், பாலமுருகன், செல்வம், செல்வகுமார் மற்றும் மோகன் ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் 21.08.2024ம் தேதி இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட வாதிக்கு சொந்தமான TN 36 AE 6475 என்ற பதிவெண் கொண்ட மகேந்திர பிக்அப் வேன் மற்றும் எதிரிக்கு சொந்தமான TN66 T 8337 என்ற பதிவெண் கொண்ட ESSAR பேருந்தையும், மோட்டார் வாகன ஆய்விற்காக வேண்டுகோள் கடிதம் கொடுத்து அனுப்பி வைத்தேன். **(வேண்டுக்கோள் கடிதங்கள் முறையே அ.த.சா.ஆ.9 மற்றும் அ.த.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது. )** 16.10.2024ம் தேதி மேற்படி வாகனங்களை ஆய்வு செய்த மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.கருப்புசாமி என்பவரை விசாரித்து ஆய்வறிக்கைகள் பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன். **(TN 36 AE 6475 என்ற பதிவெண் கொண்ட மகேந்திர பிக்அப் வேன் வாகனத்தின் ஆய்வறிக்கை அ.த.சா.ஆ.11 ஆகவும், TN66 T 8337 என்ற பதிவெண் கொண்ட ESSAR பேருந்தின் ஆய்வறிக்கை அ.த.சா.ஆ.12 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.)** பின்னர் இவ்வழக்கில் காயம்பட்ட குமார் மற்றும் மதுரைவீரன் ஆகியோருக்கு

சிகிச்சை அளித்த நத்தம் அரசு மருத்துவமனை மருத்துவர் திரு.சதீஸ்குமார் என்பவரை விசாரித்து காயச்சான்றுகள் பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன். இத்துடன் வழக்கு விசாரணை முடித்து எதிரி முத்து குமார் என்பவர் மீது 16.10.2024 அன்று சட்டபிரிவுகள் 281 மற்றும் 125 (a) BNS ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

3) 19.08.2024ம் தேதி நத்தம் அரசு மருத்துவமனையிலிருந்து எனக்கு விபத்து சம்பந்தமாக தகவல் எதுவும் வரவில்லை என்றால் சரிதான், மறுநாள் தகவல் வந்தது, உடனடியான தகவல் எதுவும் கிடைக்கவில்லை. அ.சா.1 குமார் என்பவர் வாகனத்தை மணப்பாறை மேட்டுப்பட்டியில் இருந்து எடுத்து சென்றதாகத்தான் தெரிவித்துள்ளார் என்றால் சரிதான். எந்த தேதியில் மணப்பாறையில் இருந்து திருப்பூருக்கு சென்றதாக புகாரிலும், எனது விசாரணையிலும் சொல்லவில்லை என்றால் சரியல்ல, 19.08.2024 ம் தேதி வண்டியை எடுத்துள்ளார். எத்தனை மணிக்கு வண்டியை எடுத்தார் என்ற விவரம் புகாரியிலும், வழக்கிலும் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். அ.சா.2 மற்றும் அ.சா.6 மதுரை வீரன், பாலமுருகன் ஆகியோர் மதுரை பாலமேடு பகுதியை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். மணப்பாறைக்கும், பாலமேட்டிற்கும் சுமார் 150 கிலோ மீட்டர் இருக்குமா என்றால் 80 கிலோமீட்டர் தூரம் இருக்கும். திருப்பூருக்கும், மணப்பாறைக்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் 165 கிலோ மீட்டர். மேற்படி நபர்கள் அனைவரும் ஒரே வாகனத்தில் எந்த விதத்தில், எவ்வாறு வந்தார்கள் என்பதை புகார் வாக்குமூலம் மற்றும் எனது விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். ஆனால் அவர்கள் நண்பர்கள் ஒன்றாக சேர்ந்து வந்துள்ளார்கள்.

4) விபத்து நடந்ததாக சொல்லப்படும் இடமான அம்மாப்பட்டி பிரிவு பகுதி ஆனது தேசிய நெடுஞ்சாலை என்றால் சரிதான். தேசிய நெடுஞ்சாலையின் அகலம் மண்ரோட்டையும் சேர்த்து 60 அடி இருக்குமா என்றால் 35-40 அடி

இருக்கும். விபத்து ஆனது அம்மாபட்டி பிரிவு அருகே மேற்கிலிருந்து கிழக்காக வலது பக்கமாக மேற்படி பிரிவிற்கு திரும்பும் போது ஏற்பட்டதாக தெரிய வருகிறது என்றால் சரிதான். அம்மாபட்டி பிரிவிற்கு வலது பக்கமாக திரும்பும் போது அ.சா.1 குமார் என்பவர் ஓட்டி வந்த வாகனத்தை இன்டிகேட்டர் போட்டு திருப்பினாரா என்றால் ஆமாம். அ.சா.1 இண்டிகேட்டர் போட்டு திருப்பவில்லை என்றால் சரியல்ல. அவரது வாகனத்திற்கு பின்னால் வாகனங்கள் எதுவும் வருகிறதா என்பதை வலது புறம் உள்ள கண்ணாடியை சரி பார்த்து அ.சா.1 வண்டியை திருப்பினாரா என்பதை புகார் வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றாலும், எனது விசாரணையிலும் அ.சா.1 அதைக் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றாலும் சரிதான்.

5) தார் சாலையின் அளவு எவ்வளவு இருக்கும் என்றால் 25 அடி அகலம் இருக்கும். இரவு நேரங்களில் வாகனத்தை வலது பக்கமாக திருப்பும் போது பின்புறம் வரும் வாகனங்களின் லைட் வெளிச்சம் தெரியும் என்றால் சரிதான். அ.சா.1 குமார் என்பவர் அவரது அஜாக்கிரதையால் வாகனத்தை திடீரென்று சாலையின் இடது புறத்திலிருந்து, வலது புறமாக குறுக்கே திரும்பினார் என்றால் சரியல்ல. அ.சா.1 ஓட்டி வந்த பிக்கப் வாகனம் ஆனது எந்தப் பக்கத்தில் இரண்டு முறை உருண்டது என்றால் வலது புறமாக உருண்டுள்ளது. வாகனம் வலது புறமாக உருண்டது என்பதை மாதிரி வரைபடத்தில் அந்த இடத்தை குறிப்பிட்டு காட்டவில்லை என்றால் சரிதான். அ.சா.1 க்கு மேல் சிகிச்சை அளித்த திண்டுக்கல் அரசு மருத்துவமனை மருத்துவரை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். அ.சா.1க்கு ரேடியாலஜிஸ்ட் மருத்துவர் சிகிச்சை அளித்தாரா என்ற விவரம் தெரியாது என்றால் சரிதான். அ.சா.2 மதுரை வீரன் என்பவருக்கு சிஞ்சை அளித்த நத்தம் அரசு மருத்துவமனை மருத்துவர் சிகிச்சைக்கு உடன்படவில்லை என்பதால் அவருக்கு ஏற்பட்ட காயம் குறித்து சான்று வழங்க இயலாது என்று தெரிவித்துள்ளார் என்றால் சரிதான்.

6) பாலமுருகன் என்பவர் சிகிச்சை எடுத்துக் கொண்டதாக எனது விசாரணையில் தெரியவரவில்லை என்றால் வெளிநோயாளியாக சிகிச்சை எடுத்துக் கொண்டார். வெளிநோயாளியாக சிகிச்சை எடுத்துக் கொண்டதற்கான மருத்துவ ஆவணங்கள் தாக்கல் இல்லை என்றால் சரிதான். பாலமுருகன் சிகிச்சை எடுத்துக் கொள்ளவில்லை என்பதால் தான் அதற்கான மருத்துவ ஆவணங்கள் தாக்கல் இல்லை என்றால் சரியல்ல. சம்பவ இடத்திற்கு அருகே உள்ள பிரபாகரன், முத்தையா, மலைச்சாமி, சிலம்பரசன் ஆகியோரை விசாரிக்கவில்லை என்றால் விசாரித்தேன் இரவு நேரம் என்பதால் சம்பவத்தை பார்க்கவில்லை என்று தெரிவித்ததால் விசாரிக்கவில்லை. இந்த விபரங்களை குற்ற இறுதி அறிக்கையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். அ.சா.1 மணப்பாறை குமரன் மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக் கொண்டாரா என்றால் எனது விசாரணையில் அது பற்றி சொல்லவில்லை.

7) இவ்விபத்தில் சம்பந்தப்பட்டதாக சொல்லப்படும் இரண்டு வாகனங்களும் 3 நாட்கள் காலதாமதமாக வாகன தணிக்கைக்கு அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி மூன்று நாட்கள் வாகனங்கள் எங்கு இருந்தது என்றால் காவல் நிலையத்தில் இருந்தது உரிய ஆவணங்கள் தாக்கல் செய்ததும் மோட்டார் வாகன ஆய்வுக்கு அனுப்பப்பட்டது. மேற்படி இடைப்பட்ட காலகட்டத்தில் வாகனத்தில் ஏற்பட்ட பழுதுகளை நீக்கம் செய்வதற்கு வாய்ப்புகள் உள்ளது என்றால் சரியல்ல. பேருந்தில் வந்த நபர்களுக்கோ, பேருந்து ஓட்டுனருக்கும் காயம் ஏதும் ஏற்பட்டதாக எனது விசாரணையில் தெரிய வரவில்லை என்றால் சரிதான். பேருந்தில் இருந்த நடத்துனர் மற்றும் கிளீனர், மேலும் பயணிகள் ஆகியோரை சாட்சியாக விசாரிக்கவில்லை என்றால் சரிதான். மேற்படி நபர்களை விசாரித்து இருந்தால் விபத்து எவ்வாறு ஏற்பட்டது என்று தெரிய வந்திருக்கும் என்றால் சரியல்ல. மாதிரி வரைபடம் வாயிலாக பிக்கப் வேன் ஆனது சாலையின் நடுப்பகுதியில் வந்ததாக தெரிய வருகிறது என்றால் சரிதான், வலது பக்கமாக திரும்புவதற்காக மத்திய பகுதிக்கு வந்துள்ளது. அ.சா.1

கவனக்குறைவால் தான் விபத்து ஏற்பட்டது என்றாலும் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றாலும், சரிவர புலன் விசாரணை செய்யாமல் எதிரி மீது பொய்யாக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல.

**மறு விசாரணை : இல்லை**

Co–Ordinater @ Court Point

(Semmalar, Typist)

Co–Ordinater @ Remote Point Witness

மேற்படி சாட்சியத்தை, காணொளி காட்சி வாயிலாக சாட்சி சொல்ல–சொல்ல, என்னால் திறந்த நீதிமன்றத்தில் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, சாட்சி மற்றும் இரு தரப்பு வழக்கறிஞர்கள் ஆகியோருக்கு நேரடியாக Share Option மூலமாக சரிபார்க்க பதிவு செய்யப்பட்டது. அதனை சாட்சிக்கு ஈ–மெயில் மூலமாக படித்துப்பார்க்க அனுப்பப்பட்டு, அவர் சரி என ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்து நீதிமன்றத்திற்கு மீண்டும் தபால் மூலமாக அனுப்பி வைத்தார்.

Tmt.J.Aafreen Begum

Digitally signed by Tmt.J.Aafreen Begum
Date: 2026.08.25 18:29:15 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
நத்தம்